## முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழாவினை

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர, ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர், ஊராட்சி, வட்டம், வார்டு, கிளை, பூத் வாரியாக நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாட வேண்டும்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



மார்ச்-1 தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவினை, கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், கடலூர், புவனகிரி ஆகிய ஐந்து தொகுதிகளிலும் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி, வட்டம், வார்டு, கிளை, 1429 பூத்வாரியாக, பொதுமக்களுக்கு இனிப்புகள், நலத்திட்ட உதவிகள், பள்ளி மாணவ, மாணவியருக்கு உபகரணங்கள் வழங்கி, மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், மரக்கன்று நடுதல், விளையாட்டு போட்டிகள், மகளிர் கோலப் போட்டிகள் நடத்தி, சிறப்பாக கொண்டாடிட வேண்டும். அதுசமயம் சம்பந்தபட்ட இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை வட்டம், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA), ஸ்டாலினின் மகளிர் படையினர், பூத் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்டதி.மு.க.

# மக்களின் முதல்வரே... நீடூழி வாழ்கவே!



முத்தமிழ் செதுக்கிய
அரசியல் கலையே,
அரசியல் ஆசானின்
கரத்தில் வளர்ந்தவரே!

நீர் முதல்வர் ஆனதால்,
திறன் பயிற்சி சான்று பெற்று,
"நான் முதல்வன்" ஆனேன்;

மேனாள் முதல்வர்களின்,
மதிய உணவுத் திட்டத்துடன்,
"காலை உணவு" அளித்து
மாணவர்களை மகிழ்வித்தீர்;

கல்வி கற்றிடும்,
பணிக்குச் செல்லும்,
அனைத்து மகளிரும்
பயணித்திடவே
"விடியல் பயணம்"
அமைத்துத் தந்தவரே;

அரசுப் பள்ளிகளில்
மேனிலை முடித்த,
"தமிழ்ப் புதல்வன்"
"புதுமைப் பெண்" ஐ
மேலும் கற்க
வழிகோலியவரே;

அறிவியல் உலகில்
ஒவ்வொரு தேடலும்,
இணையவழி இணைந்து,
கற்றிட. தெளிந்திட
"உலகம் உங்கள் கையில்" என,
மாணவர்களுக்கு
மடிக்கணினி வழங்கியவரே;

ஆணாதிக்க உலகினிலே,
மகளிரும் சுயமரியாதையுடன் வாழவே,
"மகளிர் சுய உதவிக்குழு" விற்கு,
வங்கிக் கடன் கொடுத்து உதவியவரே;

எங்கள் கோரிக்கை மனுவினை
பரிவோடு ஆராய்ந்து
"உங்களுடன் ஸ்டாலின்"
துணையிருப்பேன் என்றவரே;

"இல்லம் தேடிக் கல்வி" தந்து,
"மக்களைத் தேடி மருத்துவம்" செய்து,

வயோதிகர் வீடு சென்று
உணவுப் பொருள் தரும்
"தாயுமானவரே"

மக்கள் நலன் காப்பதில்
"முதல்வர்" நீர்;
மக்களுக்குச் சேவை செய்வதில்
இந்தியாவிலேயே
"முதல்வர்" நீர்;
அகில இந்திய அரசியலிலும்
"முதல்வர்" நீர்;
தேர்தல் களத்திலும்
"முதல்வர்" நீர்;
தமிழகத்தின் அடுத்த
"முதல்வரும்" நீர்தான்

நீர் வாழ்க பல்லாண்டு என
மனதார வேண்டுகிறேன்!




**எம். ஜாகீர் உசேன்**

## தேசிய உணவு பாதுகாப்பு – ஊட்டச்சத்து இயக்கத்தின் சார்பாக

# மாவட்ட அளவிலான சிறுதானியங்கள் விழா -174 விவசாயிகளுக்கு ரூ.3.56 கோடி மதிப்பில் நல உதவிகள்!

### சேலம் – பெத்தநாயக்கன் பாளையத்தில் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!



*சேலம், பிப். 28-*

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், வைத்தியகவுண்டன்புதூர் ஐஸ்வர்ய பெருமாள் திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் (26.02.2026) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கத்தின் சார்பில் மாவட்ட அளவிலான சிறுதானியங்கள் திருவிழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் பொருளாதாரம், தொழில் துறை, வேளாண்மைத் துறை உள்ளிட்ட அனைத்து த்துறைகளிலும் தமிழ்நாட்டை முன்மாதிரியான மாநிலமாக உயர்த்தியுள்ளார்கள். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களும் ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் பயனடைய வேண்டும் என்ற நோக்கில் அனைவருக்கும் தேவையான திட்டங்களை அறிவித்து அதனை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக விவசாயிகள் மேல் மிகுந்த அக்கறை கொண்டு அவர்களுக்காக பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள்.

அந்த வகையில் இன்றைய தினம் தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கத்தின் சார்பில் மாவட்ட அளவிலான சிறுதானியங்கள் திருவிழா துவக்கி வைக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கத்தின் சார்பில் ரூ.14.23 கோடி மானியத்தில் 66,189 விவசாயிகளுக்கு சிறுதானிய விதைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் 16.22 இலட்சம் மெட்ரிக் டன் எனும் உச்ச அளவை உணவு தானிய உற்பத்தியை சேலம் மாவட்டம் எய்தியுள்ளது.

அதே போன்று வரலாற்றில் முதன் முறையாக 2 இலட்சம் விவசாயிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் இலவச மின் இணைப்புகளை வழங்கியுள்ளார்கள். மேலும் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.707 கோடி மதிப்பில் 61 இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். இதன் மூலம் 58,715 ஏக்கர் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளது. விவசாயிகள் அனைவரும் உணவு உற்பத்தியில் ஈடுபட்டு விவசாயிகளின் வருமானம் மற்றும் உணவு உற்பத்தி பெருக்க வேண்டும் என்ற தலையாய நோக்கத்தோடு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையை ஊக்கப்படுத்தி வருகிறார்கள்.

மேலும், தமிழ்நாடு அளவில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.53,340 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. ஊட்டச்சத்து சார்ந்த சிறுதானியங்கள் பயிறிடுவதோடு, குழந்தைகள், பெண்கள் ஊட்டச்சத்து குறைபாட்டில் பாதிக்கப்படாமல் இருக்க முதலமைச்சர் அவர்கள் விரும்புகின்ற காரணத்தால் சிறுதானியங்கள் பொறுத்த வரையில் உற்பத்தி மற்றும் நுகர்வு சார்ந்தவற்றில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார்கள். சாகுபடி, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகப்படுத்தி, தொலைநோக்கு திட்டங்களை அறிவித்து தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உயர்த்தியுள்ளார்கள்.

இன்றைய தினம் நடைபெறும் இவ்விழாவில் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக சிறுதானியங்கள் சாகுபடி குறித்த தொழில்நுட்ப கையேடு வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்ற ஐந்து விவசாயிகளுக்கு ரூ.40,000/ மதிப்பிலான ரொக்க பரிசு மற்றும் 25 விவசாயிகளுக்கு ரூ.28.08 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை ஆகிய துறைகளின் சார்பில் 40 விவசாயிகளுக்கு, முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் அமைக்க ரூ.1.82 கோடி மானியமும் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம், மதிப்பு கூட்டுதல் இயந்திரங்கள், பவர் டில்லர், பவர் வீடர், நிழல் வலை கூடாரங்கள் மற்றும் பசுமைக்குடில் அமைத்தல் ஆகியவை 109 பயணாளிகளுக்கு ரூ.1.46 கோடி மதிப்பிலும் என மொத்தம் 174 விவசாயிகளுக்கு ரூ.3.56 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் இத்தகைய திட்டங்களை பொதுமக்கள் நல்ல முறையில் பெற்றுக்கொண்டு பயன்பெற வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்கள்.

இதனைத்தொடர்ந்து, இக்கருத்தரங்கில், சிறுதானியங்கள் சாகுபடி தொழில்நுட்பங்கள் தலைப்பில் சந்தியூர் வேளாண்மை அறிவியில் நிலையம், திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா.விஜயன், சிறுதானியங்கள் மதிப்பு கூட்டுதல் தலைப்பில் திருச்செங்கோடு, M/s. Moon Foods Millets, மேலாண்மை இயக்குநர், பெ.சந்திய மூர்த்தி, சிறுதானியங்களில் பயிர்பாதுகாப்பு தலைப்பில் சந்தியூர், வேளாண் அறிவியல் நிலையம், தொழில்நுட்ப வல்லுநர் திரு.மா.இரவி, சிறுதானியங்களில் புதிய இரகங்களும் அதன் சிறப்பியல்புகளும் தலைப்பில் ஏத்தாப்பூர், மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சா.ர. வெங்கடாசலம் மற்றும் பேராசிரியர் & தலைவர் கா.திருக்குமரன் உயிர்ம வேளாண்மையில் சிறுதானியங்கள் சாகுபடி என்ற தலைப்பிலும் தொழில்நுட்ப சிறப்புரை வழங்கினார்கள். இவ்விழாவில், மாவட்டம் முழுவதும் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

முன்னதாக, அமைச்சர் இராஇராஜேந்திரன் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை உள்ளிட்ட துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி மற்றும் கருத்துக்காட்சி அரங்கினை திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், வேளாண்மை இணை இயக்குநர் கு.சீனிவாசன், துணை இயக்குநர் முனைவர் பா.கண்ணன், விதை ஆய்வு துணை இயக்குநர் திருமதி கு.சித்ரா, உதவி இயக்குநர் பொ.வேல்முருகன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். காத்தவராயன்

**பிப்ரவரி 28 (2020)**



**தனது இளமைப் பருவத்திலேயே கழக உறுப்பினராகி பணியாற்றி வந்தவர்.**

**ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட பிரதிநிதி, மாவட்ட துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**பேர்ணாம்பட்டு நகர்மன்றத் தலைவராகவும், 2019ல் நடைபெற்ற குடியாத்தம் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மக்கள் பணியாற்றி அவர்கள் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி. நித்யானந்தம்

**பிப்ரவரி 28 (2020)**



**இளமைக் காலம் முதல் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**நகர இளைஞர் அணி அமைப்பாளர், நகரச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**வாலாஜா நகர்மன்ற உறுப்பினராகவும், பின்னர் நகர்மன்றத் தலைவராகவும் பதவி வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**